**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 03** **நாள் : 27.11.2017**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி நடைபெறவுள்ள எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணைத்தின் உத்தரவின்படி, எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதிக்கு வருகின்ற 21.12.2017 அன்று இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே மேற்கண்ட தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் நன்னடத்தை விதிகள் முழுமையாக அமலில் உள்ளது.

தேர்தல் குறித்த புகார்களை பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை அலுவலகத்தில் தேர்தலுக்காக பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவிக்கலாம். 3 உதவிச் செயற்பொறியாளர் தலைமையில் 3 உதவிப் பொறியாளர், 3 கண்காணிப்பாளர், 24 உதவியாளர்கள் மற்றும் பணியாளர்கள் என அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறையானது சுழற்சி முறையில் 24 மணிநேரமும் செயல்படும் வண்ணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1913 மற்றும் ஒரே நேரத்தில் வரும் 4 அழைப்புகளை ஏற்றுக்கொள்ளும் வசதியுடைய 1800–4257012 என்ற தேர்தல் கட்டுப்பாட்டு அறை எண்ணிலும், மேலும், 75502 25820, 75502 25821 என்ற வாட்ஸ் ஆப் எண்களிலும் பொதுமக்கள் தங்கள் புகார்களை தெரிவிக்கலாம். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் தேர்தல் குறித்த புகார்கள் உடனடியாக பதிவு செய்யப்பட்டு, தேர்தல் நடத்தும் அலுவலர், பறக்கும் படை, வீடியோ கண்காணிப்பு குழு, நிலைக் கண்காணிப்பு குழு போன்றவற்றிற்கு உடனடியாக தகவல் அனுப்பப்படும். புகார்கள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள புகார் தெரிவிக்கப்பட்ட இடங்களுக்கு அலுவலர்கள் செல்வதனை சம்பந்தப்பட்ட கண்காணிப்பு குழுவிற்கு வழங்கப்பட்ட வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள GPRS மூலம் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கப்படும்.

விதிமீறல் உள்ள இனங்களில் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**